சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.03.12.2024
OS.No.725/2018
PW 1 : பிரபாவதி (வயது 40 ) க/பெ.அமிர்தராஜ்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு கு.வி தொடர்ச்சி</u>**

தற்போதைய வழக்குடன் 724/2018 என்ற வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கினை பார்வதி, ராஜேந்திரன், நல்ல பொண்ணு, சந்திரா ஆகியோர்கள் பனையடியான் மீது பாக பிரிவினைக்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கிற்கும் தற்போதைய வழக்கிற்கமான சொத்து ஒரே சர்வே எண். 85/11 என்றால் சரிதான். அதன் பரப்பளவு 53 செண்ட் ஆகும். 0.21.5 ஏர்ஸ் 54 செண்ட் என்றால் சரியல்ல. மேற்படி சொத்திற்கான வருவாய் பதிவுகள் பார்வதி, மருதாயி பெயரில் இருந்தது. மேற்படி சொத்து பி அட்டவணை 6 வது அயிட்ட சொத்தாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். குஞ்சுபிள்ளை மனைவி பெரியம்மாளின் சொத்து தான் மேற்படி சர்வே எண்.85/11 என்றால் சரிதான். அவர்களின் மகன் சிவனேசன் என்கிற கோபால் மற்றும் மருதாயி என்ற பெண் ஆகியோர் அவர்களுக்கு வாரிசுகள் என்றால் சரிதான். அதன்படி சிவனேசனுக்கும் மருதாயிக்கும் ஆளுக்கு பாதி பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். சிவனேசன் என்கிற கோபால் இறந்துவிட்டார் அவரது மனைவி தான் பார்வதி. ராஜேந்திரன், நல்லபொண்ணு, சந்திரா ஆகியோர்கள் பார்வதியின் மக்கள். மருதாயி இறந்துவிட்டார், அவரது கணவர் தான் நல்லு மூப்பன். அவர்களின் வாரிசு தான் பனையடியான். மேற்படி வாரிசுகள் கையெழுத்திட்டு பத்திரம் ஏற்படுத்திய விவரம் தெரியுமா என்றால் 1971 ல் கோபால் முத்திரையருக்கு, குஞ்சுபிள்ளையின் வாரிசுகள் விற்பனை செய்துள்ளார்கள் என்று நினைக்கிறேன், ஆனால் ஞாபகம் இல்லை. நான் அதுபோன்ற பத்திரத்தை பார்த்திருக்கிறேன். அதை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது கணவரிடம் உள்ளது. எனது கணவர் அந்த ஆவணத்தை வீட்டில் தான் வைத்துள்ளார். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அதை

கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் தாக்கல் செய்ய முடியாது. நான் கூறுவதுபோல், அவர்கள் கிரயம் எதுவும் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக கிரயம் செய்ததாக பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல,. அதனால் தான் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. பார்வதி வாரிசுகளுக்கும் மருதாயி வாரிசுகளுக்கும் இடையே பாகம் ஏற்பட்டதா என்று எனக்கு தெரியவில்லை. சாட்சி தானாக முன்வந்து பார்வதியின் வாரிசுகள் இதுநாள் வரை மருதாயி வாரிசுகளுக்கும் தங்களுக்கும் இடையே பாகம் பிரிக்கவில்லை என்றும், அதற்காக தாங்கள் 2008 ல் பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தன்னிடம் கூறியதாக கூறியுள்ளார். அந்த பாக பிரிவினை வழக்கு 2008 அல்லது 2009 என்றால் 2008 என்று தான் நினைக்கிறேன் சரியாக தெரியவில்லை. தாவா வழக்கு சர்வே எண். 85/11 க்கு மட்டுமே நடக்கிறது என்றும்,தேவையில்லாமல் வழக்கை திசை திருப்பும் நோக்கத்தில் பல சர்வே எண்களை ஏ மற்றும் பி அட்டவணையாக குறிப்பிட்டு தாவா வழக்கையும் நிருபண வாக்குமூலத்தையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>** - இல்லை.

/ signed /
பிரபாவதி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

R MOHANA

Digitally signed by R MOHANA
Date: 2024.12.03 19:00:10 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி